www.tamilarangam.net

128

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## 'வீடியோ டெக்' கொடுத்தால் விடுதலை கிடைக்கும்

### கைதுகள்

**1987ம்** ஆண்டு இறுதியிலும் 1988ன் ஆரம்பப் பகுதியிலும் இந்தியப் படையினரால் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

தகவல்களின் அடிப்படையிலும், சந்தேகத்தின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்டவர்கள் ஒரு பிரிவினர்.

இரவீந்திரன் இறந்து போனார்.

பாவம் அன்னபூரணம். மூத்த மகனை இந்தியப் படையினரின் சித்திரவதைக்குப் பலிகொடுத்தார். அதன் பின்னர் இளைய மகன் சுதாகரன் இந்தியப் படைச் சுற்றி வளைப்பில் சயனைட் விழுங்கி மரணமானார். அடுத்தவனான பிரபாகரன் இந்தியப்படையோடு நடைபெற்ற மோதலில் பலியானார்.

மூன்று பிள்ளைகளையும் பறி கொடுத்து நின்றார் அன்னபூரணம் என்ற அந்தத் தாய்.

அதைத்தான் பிரபாகரனும் உண்ணுகிறார். மற்றத் தளபதிகளும் அப்படியே. சில சமயங்களில் தம் தோழர்களுக்கு உணவைப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு தலைவர் பிரபாகரன் பட்டினி கிடந்த நாட்களும் உண்டு, என்று நான் அவர்களுக்குக் கூறினேன். அதனைக் கேட்டதும் அவர்கள் பேராச்சரியம் அடைந்தனர். நான் சொல்லுவதை நம்ப முடியாமல் என்னைத் திகைப்புடன் பார்த்தார்கள்." இவ்வாறு நடேசன் தன் அனுபவத்தைக் கூறியிருந்தார்.

### கைதிகள் விடுதலை

இந்தியப் படையினருடன் நடைபெற்ற யுத்தத்தில் ஆரம்பக் கட்டத்தில் இந்தியப்படை வீரர்கள் 18 பேர் புலிகளால் பிடிக்கப் பட்டனர்.

யாளர்களைத் தடுத்தனர் இந்திய அதிகாரிகள்.

மாத்தையா விடவில்லை.

"நாங்கள் இவர்களைச் சித்திரவதை செய்தோமா என்று கேளுங்கள்?" என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

விடுதலையான படையினரில் ஒருவரான வாமன் சிட்டி என்பவர்: "புலிகள் எங்களை மிக நன்றாகவே நடத்தினார்கள். எங்களை சித்திரவதை செய்யவில்லை" என்று கூறினார்.

உடனே மாத்தையா மற்றொரு காரியம் செய்தார்.

தன்னிடமிருந்த புகைப்படங்களை அங்கு வந்திருந்த பத்திரிகையாளர்களிடம் விநியோகித்தார்.



இன்னொரு பிரிவினர், இந்தியப் படையினரின் தேவைகளுக்காகக் கைது செய்யப்பட்டனர்.

அது என்ன தேவை? இந்தியப் படையினரிடம் பிடிபட்ட தமது பிள்ளைகளை மீட்க, பணமாகவும் பொருளாகவும் கொடுக்கவும் பெற்றோர்கள் தயாராக இருந்தனர்.

பணமாக வாங்குவதைவிட பொருளாக வாங்குவதில்தான் இந்தியப் படையினர் ஆர்வம் காட்டினார்கள்.

வீடியோ டெக், ரேடியோக்கள், ரேப் ரெக்கோடர்கள், நகைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டு, தம்மால் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களை விடுவித்தனர்.

### தடுப்பு முகாம்கள்

இந்தியப் படையினரின் தடுப்பு முகாம்களுக்குள் இருந்தவர்களும் பயங்கரமான சித்திரவதைகளை அனுபவித்தனர்.

தலை கீழாகக் கட்டித் தொங்க விடுதல், மின்சாரம் செலுத்துதல், கண்களுக்குள் மிளகாய்த்தூள் போடுதல் போன்ற கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள்.

தடுப்பு முகாம்களில் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள், உளவியல் ரீதியான சித்திரவதைகளையும் அனுபவித்தனர்.

உள்ளே இருக்கும் அந்த உறுப்பினர்களை அழைத்து விசாரிக்கும் படை அதிகாரிகள், புலிகள் இயக்கத் தலைவர்களை

### படையினர் வருத்தம்

சில நேரங்களில் எங்களுக்குக் காவலாக இருக்கும் இந்திய இராணுவ வீரர்களுடனும் நான் பேசிப்பார்ப்பது உண்டு. அப்பொழுது அவர்களும் இந்தப் போரை விரும்பவில்லை என்பது எனக்குப் புரிந்தது.

இராணுவ அதிகாரிகள் குடித்துவிட்டுக் கூத்தடிப்பதையும், இந்தியாவிலுள்ள தங்கள் குடும்பத்தினருடன் மணிக்கணக்கில் தொலை பேசி

## புலிகள் விடுவித்த இந்தியப் படையினர்

இவ்வாறு ருசிகண்டதால் புலிகளாக இருக்க முடியாது என்று தமக்கு நன்கு தெரிந்தும்கூட, பல இளைஞர்களை அவர்கள் கைது செய்தனர். அதே நேரத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரும் இந்தியப் படையினரின் பலவீனத்தைப் பயன்படுத்தி விடுதலையாகிச் சென்றனர்.

டெக்கையோ, விலை உயர்ந்த நகையையோ கொடுத்துவிட்டு நைசாக விடுபட்டுச் செல்வது புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் பெரிய காரியமல்ல.

கெட்ட வார்த்தைகளால் திட்டுவார்கள். "புலிகளை ஒழித்துக் கட்டத்தான் வந்திருக்கிறோம்! உங்களை அழித்துவிட்டுதான் இங்கிருந்து செல்லுவோம்!" என்றும் சூளுரைப்பார்கள்.

இந்தியப்படையின் தடுப்பு முகாமில் இருந்த புலிகள் இயக்கப் பிரமுகரான நடேசன் (இன்றைய தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர்) தன் அனுபவம் பற்றி ஒருமுறை கூறியது இது:

"வெளியே நடப்பதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு மிகக் குறைவு.

மூலம் பேசுவது பற்றியும், அதேவேளையில் தாமோ மாதக் கணக்காகியும்கூட தங்கள் குடும்பத்தினருக்கு கடிதம் எழுதமுடியாமல் இருப்பது பற்றியும் இந்தியச் சிப்பாய்கள் எம்மிடம் அங்கலாய்ப்பதுமுண்டு.

விடுதலைப் புலிகளைப் பற்றிய அச்சமும், மதிப்பும் அவர்களிடம் குடிகொண்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். எங்கள் தலைவர் பிரபாகரனை மதிப்புக்குரிய மாபெரும் தளபதியாக இந்தியச் சிப்பாய்கள் போற்றுவதை என்னால் உணரமுடிந்தது.

இந்தியப் படையில் அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதை நான் பார்த்தேன். அதிகாரிகளுக்கு என்று தனியான உணவு விடுதிகளும் இருந்தன. உணவிலும் வேறுபாடு இருந்தது. இந்த ஏற்றத் தாழ்வைப் பற்றியெல்லாம் இந்தியச் சிப்பாய்கள் எங்களிடம் புலம்புவதுமுண்டு.

'விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அத்தகைய ஏற்றத் தாழ்வு கிடையாது. விடுதலைப் புலிகள் என்ன உணவு உண்ணுகிறார்களோ,

வன்னிக்காட்டில் அவர்களை சிறை வைத்திருந்தனர் புலிகள்.

ஆனால் இந்தியப் படையினர் தமது பிரசாரத்தில் வேறுவிதமாகக் கூறினார்கள்.

**"தம்மிடமிருந்த 18 இந்தியப் படையினரையும் புலிகள் டயர் போட்டுக் கொளுத்தி விட்டனர்" என்று பிரசாரம் செய்தனர்.**

அந்தப் பிரசாரத்தை முறியடிக்கப் புலிகள் திட்டமிட்டனர்.

1987ம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேசப் பத்திரிகையாளர்கள் முன்பாக 18 இந்தியப் படையினரையும் விடுவித்தனர் புலிகள்.

இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள யாழ்ப்பாணத்திற்குள் அந்த கைதிகளைக் கொண்டுவந்து சேர்த்தவர் மாத்தையா. எப்படி உள்ளே வந்தனர் என்பது பத்திரிகையாளர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கைதிகள் விடுவிக்கப்பட்ட இடத்தில் இந்தியப் படை அதிகாரிகளும் இருந்தனர்.

விடுவிக்கப்பட்ட கைதிகளிடம் கேள்விகள் எதுவும் கேட்கக்கூடாது என்று பத்திரிகை

இந்தியப் படையினரின் படுகொலைகள் பற்றிய புகைப்படங்களே அவை.

பத்திரிகையாளர்களுக்கு ஏக குஷி பாய்ந்து பாய்ந்து புகைப்படங்களை வாங்கிக் கொண்டனர்.

இந்தியப் படை அதிகாரிகள் அதனை எதிர்பார்க்கவில்லை. செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர்.

புகைப்படங்களை கொடுத்துவிட்டு கையசைத்தபடியே புலிகளும் மாத்தையாவும் மின்னல் வேகத்தில் சென்றுவிட்டனர்.

அதன் பின்னர்தான் இந்தியப் படை அதிகாரிகள் பத்திரிகையாளர்களிடம் தங்கள் வேலையைக் காட்டினார்கள்.

புகைப்படங்களை எங்களிடம் தாருங்கள். அப்படித் தராவிட்டால் இனிமேல் இப்படியான நிகழ்ச்சிகளுக்கு உங்களை அழைத்து வரமாட்டோம்" என்று கூறினார்கள். அதனால் பத்திரிகையாளர்கள் தம்மிடமிருந்த புகைப்படங்களை திருப்பிக் கொடுத்து விட்டனர்.

(தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### காணாமல் போனோர்

மறுபுறம் கைதாகி காணாமல் போனவர்கள் பட்டியலும் நீண்டுகொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் அரியாலையில் பொன்னையா காந்தரூபன் என்பவர் கைதுசெய்யப்பட்டார். இந்தியப் படையினரின் ஜீப்பைக் கண்டதும் பயத்தில் ஓடியதுதான் காந்தரூபன் செய்த குற்றம்.

காந்தரூபனைப் பிடித்துச் சென்ற இந்தியப் படையினர் கூறிய தகவல்தான் ஆச்சரியமானது.

காந்தரூபன் ஒரு புலி என்றும், அவனிடமிருந்து இரண்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், பின்னர் அவனது வீட்டில் இருந்தும் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறினார்கள் இந்தியப் படையினர்.

அவர்கள் அப்படிக் கூறியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

காந்தரூபனைப் பிடித்துச் சென்றவுடன் அவர் ஒரு புலியாக இருக்கலாம்; அதுதான் தம்மைக் கண்டதும் ஓடியிருக்கிறான் என்று நினைத்து அவனை சித்திரவதை செய்தனர்.

சித்திரவதை தாங்காமல் காந்தரூபன் செத்துப்போனார். அதனால்தான் காந்தரூபனை ஒரு புலியாகக் காட்ட கடுமையான சிரத்தை எடுத்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நடைபெற்ற சம்பவங்களில் ஒன்று இது:

அன்னபூரணம் என்ற தாயாருக்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூத்தவர் இரவீந்திரன். அவருக்கு அடுத்தவர்களான சுதாகரனும், பிரபாகரனும் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள்.

யாரோ தகவல் கொடுத்துவிட்டனர்.

அன்னபூரணம் வீட்டுக்குள் புகுந்த இந்தியப் படையினர் மூத்தவன் இரவீந்திரனைப் பிடித்துக் கொண்டு போனார்கள்.

"உன் தம்பிகள் இருவரும் எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டு இரவீந்திரனை சித்திரவதை செய்தனர்.

சித்திரவதை தாங்காமல் துடிதுடித்த

பத்திரிகைகளும் கொடுக்கப்படுவதில்லை.

அவ்வப்போது இந்தியப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளே வருபவர்கள் மூலம்தான் ஓரளவு செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. இந்திய இராணுவ அதிகாரிகள் பெரும்பாலானோர் எங்களை மிக மோசமாகவும், கேவலமாகவும் நடத்தினார்கள்.

காரணமேயில்லாமல் நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்து எங்கள் தலைவர் பிரபாகரனைப்பற்றி மரியாதைக் குறைவான வார்த்தைகளால் திட்டுவார்கள்.

கேரளாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஒருநாள் என்னை அழைத்து, "இந்தியாவில் நெடுமாறன், வீரமணி ஆகிய இரண்டே இரண்டு பேர்தான் உங்களுக்காக......... கொண்டிருக்கிறார்கள். அவர்களைவிட்டால் உங்களுக்கு வேறு நாதி கிடையாது" என்று ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். சில நேரங்களில் எங்கள் எல்லோரையும் சுட்டுத் தள்ளப்போவதாகவும் அதிகாரிகள் மிரட்டுவார்கள்.

இந்திய இராணுவ அதிகாரிகளில் சில நல்லவர்களும் இருந்தார்கள். எங்கள் அனைவராலும் 'மாமா' என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஒரு அதிகாரி இருந்தார்.

பார்ப்பதற்கு பூதம்போலத் தோற்றமளித்த அவர் மனிதாபிமானம் நிறைந்தவராக இருந்தார். அவர் தென்னாட்டுக்காரர். ஓரளவு தமிழ் பேசத் தெரிந்தவர். எங்களை அவர் அன்போடும் பரிவோடும் நடத்தினார்.

எமது சிறைவாசத்தின் பிற்பகுதியில் வெளியே நடக்கும் முக்கியமான செய்திகளை அவர்தான் சொல்லுவார். அவர் வரும் வேளையை நாங்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். எங்களைப் பார்க்க எங்கள் மனைவி மக்கள் வந்தால் அந்தச் செய்திகளையெல்லாம் முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவிப்பார்.

அவரைப்போன்ற அதிகாரிகள், "இந்தப் போர் தேவையற்ற ஒன்று. தமிழர்கள் நமக்கு எதிரிகள் அல்லர். நம்முடைய நண்பர்கள். அவர்களை எதற்காக எதிர்த்துப் போரிடவேண்டும்?" என்று வருத்தப்பட்டு பேசுவார்.

**தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் விடுதலைப் புலிகளுக்கு பெரும் உதவிகள் செய்திருக்கிறார். அவை பற்றி அரசியல் தொடரில் விபரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தற்போதும் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருக்கும் தமிழ் தேசியக் கட்சித் தலைவர் பழ-நெடுமாறன் நினைவு கூர்ந்துள்ள சில சம்பவங்கள் இவை:**

1987ம் ஆண்டு மே நாளில் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியை எம்.ஜி.ஆர் அறிவித்தார்.

## "எம்.ஜி.ஆரின் கண்கள் அப்போது கசிந்தன"

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நாலு கோடி ரூபாய்களும் (இலங்கைப்பெறுமதியில் கிட்டத்தட்ட எட்டுக் கோடி ரூபாய்கள்) புலிகளின் தோழமை இயக்கமான ஈரோஸ் இயக்கத்திற்கு ஒரு கோடி ரூபாய்களும் கொடுப்பதாக அவர் அறிவித்த செய்தி பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது.

இலங்கை அரசு கண்டனம் செய்தது. தமிழ் நாட்டில் உள்ள சில பத்திரிகைகளும் எம்.ஜி.ஆரைக் கண்டித்தன. 'றோ' உளவு அமைப்பு ஆத்திரமடைந்தது. தடுத்து நிறுத்த முயற்சி செய்தது.

நானும், வீரமணியும் எம்.ஜி.ஆரின் நடவடிக்கையை வரவேற்று அறிக்கை கொடுத்தோம்.

நாலு கோடி ரூபாய் மட்டுமன்றி அதற்கு முன்னும் பின்னுமாக தனது இறுதிக் காலம் வரை மேலும் பல கோடி ரூபாய்களை எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு வாரி வாரி வழங்கினார். ஆனால் அதைக் குறித்து அவர் ஒருபோதும் விளம்பரம் தேடிக் கொண்டதில்லை.

1987 ஆகஸ்ட் நாலாம் திகதி எம்.ஜி.ஆர் அவர்களை அவருடைய தோட்டத்தில் நானும் வீரமணியும் சந்தித்தோம்.

மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவரைச் சந்தித்ததால், அவருடைய உடல் நிலையைப் பார்த்துப் பதறிப்போனோம். அவரும் உணர்ச்சிவசப்பட்டார்.

"என்ன விடயம்?" எனச் சைகையின் மூலம் அவர் கேட்டபொழுது விபரங்களைக் கூறினேன். இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிய எங்கள் ஐயங்களை எடுத்து விளக்கினோம்.

இறுதியாக அவரிடம் பின்வருமாறு கூறினேன்.

"கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் தமிழ்த் திரைப்படத் துறையில் கொடி கட்டிப் பறந்திருக்கிறீர்கள். இது மட்டும் வரலாற்றில் நிலையான இடத்தை உங்களுக்குப் பெற்றுக்கொடுத்துவிடாது. உங்களுக்கு முன்பும் பல நடிகர்கள் திரையுலகில் அழியாத புகழ் பெற்றிருக்கிறார்கள். உங்களுக்குப் பின்பும் எத்தனையோ பேர் திரையுலகில் மின்னக்கூடும்.

உங்களுக்கு முன்பாகப் பலர் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். உங்களுக்குப் பின்பும் பல முதலமைச்சர்கள் அரசோச்சுவார்கள். ஆனால் உங்களுக்கு முன்போ, பின்போ முதலமைச்சர்களாக இருந்தவர்களுக்கோ, இருக்கப்போகிறவர்களுக்கோ கிடைக்காத வாய்ப்பு உங்களுக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது.

உங்கள் காலத்தில் ஈழத் தமிழர்கள் விடுதலை பெறப் போராடினார்கள். நீங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தமிழீழம் அமையக் காரணமாக இருந்தீர்கள் என்பதுதான் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தை உங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் இதைச் சொல்லவே வந்தேன்" என்றேன்.

நான் பேசப் பேச அவர் உணர்ச்சி வசப்பட்டார். ஏதோ பதில் கூற முயன்றார். அவரால் முடியவில்லை. எனது கைகளை இழுத்து அவருடைய நெஞ்சில் வைத்துக் கொண்டு தன் கைகளால் நெஞ்சில் தட்டிக்காட்டினார்.

அவ்வாறு செய்யும்போது அவருடைய கண்கள் கசிந்தன. எனக்கும் வீரமணிக்கும் கண்கள் பனித்தன.



அவர் என்ன சொல்ல முயன்றார் என்பது எங்களுக்கு முழுமையாக விளங்கா விட்டாலும், ஓரளவு புரிந்தது.

பின்னர் சிற்றுண்டி கொண்டுவரச் சொல்லி, அவரும் எங்களுடன் உண்டார்.

எம்.ஜி.ஆர் மறைந்தபோது பிரபாகரன் அனுப்பிவைத்த செய்தி இது:

ஈழத்தில் தமிழினம் அநாதையாக ஆதரவின்றித் தவித்துக் கொண்டிக்கையில் உதவிக்கரம் நீட்டி உறுதுணையாய் நின்ற புரட்சித் தலைவனே!

தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்த செயல்வீரனே! தங்கள் இழப்பு வேதனைச் சகதியில் சிக்கிக் கிடக்கும் தமிழீழ மக்களின் மார்பில் தீமூட்டுவது போலுள்ளது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்